புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

===============================================================================

# நற்றிணையில் பொறையன்

முனைவர் அ.பாரதிராணி,
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்,
அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி -3

===============================================================================

ஆய்வுச் சுருக்கம் :

பாறை போலத் தாங்கும் உள்ளம் கொண்டவன் பொறையன். குடிமக்களின் நலனில் கவனம் கொண்டவனாகவும் மக்களுக்கான வாழ்வியல் வழிகாட்டுபவனாகவும் பொறையன் நிலைப்படுத்தப்பட்டுள்ளான். அக உணர்வுகளின் வெளிப்பாட்டுச் சூழல் அமைவுகளில் புறவேந்தர்களின் வளமையும், வென்றிச் சிறப்பும், ஈகையும் எடுத்துக்காட்டப்படுகிறது. வீரம், மென்மை, உயர்வு எனப் பல்வேறு வழிமுறைகளில் பொறையன் காட்சிப்படுத்தப்படுகிறான் என்பதை எடுத்துக்காட்டுவதே ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது. அகத்தில் புறமும் புறத்தில் அகமும் வெளிப்படுதல் வாழ்வியல் எதார்த்தம் என்பதையே இவ்வாய்வு விளக்கி வரைகின்றது.

திறவுச்சொற்கள் :

பொறையன், மூவன், உபகாரி, தொண்டி, நிறையுறு மதி.

## முன்னுரை :

சங்க அக இலக்கியங்கள் தனித்துவம் நிறைந்ததாகப் போற்றப்படுகின்றன. அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இரண்டு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. எட்டுத்தொகையில் அகம் சார்ந்த ஐந்து நூல்களில் ஒன்று நற்றிணையாகும். நல் + திணை என நவிலப்படும் நற்றிணை 187 புலவர்கள் பாடிய 400 பாடல்களைக் கொண்டுள்ளது. ஐந்து திணைகளின் கீழ் உள்ள பாடல்கள் சூழலையும், அன்பையும் வெளிப்படுத்தும் பாங்கு அளப்பரியது. பல்வேறு மன்னர்கள் குறித்த குறிப்புகள் இடம் பெற்றுள்ள இந்நூலின் ‘‘பொறையன்‘‘ குறித்த பதிவுகளையே இக்கட்டுரை நிரல்படுத்த முனைகிறது.

## பொறையன் :

நற்றிணையில் நான்கு பாடல்களில் ‘‘பொறையன்‘‘ என்ற பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிஞ்சித் திணையில் இரண்டு பாடல்களும், பாலைத் திணையில் இரண்டு பாடல்களும் என முறை நான்கு பாடல்கள் பொறையன் குறித்த செய்தியினை வெளிப்படுத்துகிறது.

## பொறையன் – பொருள் விளக்கம் :

பொறை என்றால் பாரம் தாங்குதல் என்று பொருள் படுகிறது. பொறுத்துக் கொள்ளுதல் என்றும் விளக்குவர். அதனால் தான் வள்ளுவப் பெருந்தகை பொறையுடைமை என்று தனி அதிகாரமே வகுத்துள்ளார்.

பொறை நாட்டு அரசன் பொறையன் என்று அழைக்கப்படுகின்றான். இதில் பொறை என்னும் சொல் பாறையைக் குறிக்க பயன்படும் சொல்லாக வழக்கில் உள்ளது. பாறை போன்று திடமுடன் குடிமக்களைக் காப்பவனே பொறையன் என்ற பெயருக்கு விளக்கமாகி நிற்கிறது. மக்களைத் தாங்கும் தன்மை உடைய வேந்தர்கள் பொறையன் எனப்பட்டுள்ளனர். அவ்வகையில் ’’தொண்டி’’ என்னும் துறைமுகத்தை ஆண்டவன் பொறையன் என நற்றிணை விளம்பி நிற்கிறது.

"பொறை என்றால் "ரொட்டித்துண்டு"[1] என்று கிரியா விளக்குகிறது. பசி போக்கும் உணவு ரொட்டித்துண்டு அதே போன்று குடிமக்களின் பசியைப் போக்கும் தன்மையுடையவராக இருப்பவர்களைப் பொறையன் என்றும் அழைத்துள்ளனர் எனவும் பொருள் கொள்ள இடமுண்டு.

பொறையனின் தொண்டி நகரப் பொலிவு :

இயற்கைப் புணர்ச்சியில் மகிழ்ந்த தலைவன் தலைவியை ஆயத்தோடு காண்கிறான். அவளது எழிலில் மனம் நிறைந்து அவளைத் தனக்காக ஈன்று புறம் தந்த பெற்றோரை வாழ்த்தி மகிழ்கிறான்.

"திருமணி புரையும் மேனி மடவாள்
யார் மகள்கொல்? இவள் தந்தை வாழியர்!

(நற்-பா-எ.8 (3-4))

நீலமணி போன்ற உடலை உடைய இந்தத் தலைவி யாரோ?. அசையா உள்ளம் கொண்ட என்னையே துன்பம் செய்தனள். இப்பெண்ணைப் பெற்று எனக்கு உதவிய இவளது தந்தை நெடுங்காலம் வாழ்க என வாழ்த்தி மகிழ்கிறான் தலைவன்.

சங்க இலக்கியங்கள் திணைகளின் அடிப்படையில் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. ஆகவே இயற்கைக் கூறுகளை எளிதாக உள்வாங்கி புலவர்கள் வெளிப்படுத்துகின்றனர். "இயற்கையைப் பாடுபொருளாக்க முற்படவில்லை. பாடல்களில் பின்னனியாகவே சங்க இலக்கியம் பார்க்கிறது"[2] என்ற கூற்றிற்கு ஏற்ப பொறையனின் தொண்டி நகர் சிறப்பு தலைவியின் நற்றாயை வாழ்த்தப் பின்புலமாகியுள்ளது.

தந்தையை வாழ்த்திய தலைவன் தலைவியின் தாயையும் வாழ்த்த விழைகிறான். அவ்வாறு வாழ்த்தும் போது தொண்டி நகரின் சிறப்பு போல் தலைவியின் அன்னை சிறக்க வேண்டும் என்று விரும்புகிறான். அரிந்து வரப்பட்ட நெற்போரில் அரி எடுப்போரால் கையகப்படுத்தப்பட்ட கண்போன்ற நெய்தல் மலர் மலரும். அத்தக வளம் கொண்டது தொண்டி நகர் என்றும் அந்நகரினை ஆளும் சிறப்புடைய சேர மன்னன் பொறையன் என்றும் சுட்டப்படுகிறது இதனை,

"கண்போல் நெய்தல் போர்வில் புக்கும்
திண்தேர்ப் பொறையன் தொண்டி
தன்நிறம் பெறுக இவள் ஈன்ற தாயே

(நற்.பா.எ.8 (8-10))

என்ற அடிகள் விளக்குகின்றன. தான் பதிந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்டு வேறு இடம் சென்றாலும் தான் இருக்கும் இடத்தில் தன்னை நிலைப்படுத்திக் கொள்வதே தனக்கான தனித்துவம் என்பதை நெய்தல் மலர் வெளிப்படுத்துகிறது. அதே போன்ற தன்மை உடையவளாக தலைவியை வளர்த்திருக்கும் நற்றாய் சிறப்புடன் வாழ வேண்டும் என்ற கருத்தினைத் 'தொண்டி' நகரின் எழிலோடு சேர்த்து கூறுகிறார் பெயர் அறியா புலவர்.

அக உணர்வுகளின் வெளிப்பாட்டில் மணம் மகிழும் தலைவன் புற இலக்கியப் பேராண்மை மிக்க பொறையனின் வலிமையான தேரும், அத்தேர் வலம் வரும் ஊரும் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. குறிஞ்சித் திணை சார்ந்த இப்பாடல் சேரன் பொறையன் என்பதைச் சுட்டுகிறது. அவனது நெய்தல் மலர்கள் மலர்ந்திடும் கடற்கரை வளத்தை இங்கே பதிவு செய்கிறது.

பொறையனின் வீரம் :

"பெருமையும் முரனும் ஆடூஉமேன"[3] (தொல்.களவு – 7) எனத் தொல்காப்பியம் ஆண்களின் அழகு வலிமையும், வீரமும் என கருத்துரைக்கிறது. அத்தகு சிந்தனை தெளிவுரையாய் பொறையன் வாழ்ந்துள்ளதை நற்றிணை விளக்குகிறது. பொய்கையார் என்னும் புலவர் பாலைத் திணைப் பாடல் வழியாகப் பொறையனின் வெற்றிச் சிறப்பினை எடுத்துரைக்கின்றார். பரிவினை ஆற்றாளாகி வருந்தும் தலைவிக்கு பொறையனின் சிறப்பினை எடுத்துரைத்து தோழி தேற்றுகின்றாள். "மூவன்" என்னும் உபகாரியை வென்று அவனின் பற்களைக் கொணர்ந்து வாயிற் கதவில் வைத்து அழகு செய்தவன் பொறையன் என்கிறார். இக்கூற்றினை

"பருவரல் நெஞ்சமொடு பல்படர் அகல
வருவர் வாழி தோழி! மூவன்

*முழுவலி முள்எயிறு அழுத்திய கதவின்*
*காணல் அம்தொண்டிப் பொருளின் இவன்மேல்*
*தெறல் அருந்தானைப் பொறையன்''*

*(நற்.பா.எ.18(1-5))*

*என்ற அடிகள் நிரல்படுத்துகின்றன.*

*பகையரசர்கள் தோல்வி அடையும் போது அவர்களை வென்ற அரசன் பகை வேந்தனின் பற்களைப் பிடுங்கி தன் மனைக் கதவில் அலங்காரமாக இழைத்து வைப்பது மரபாக இருந்துள்ளதை மேற்கட்ட வரிகள் எடுத்துரைக்கின்றன. பொறையன் வீரம் நிறைந்தவனாக இருந்ததையும் போரில் வெற்றி வாகை சூடியவன் என்பதையும் இப்பாடல் சுட்டியுரைக்கிறது.*

*இரவலர்க்கு ஈயும் திறம் :*

*பண்பட்ட தமிழ் சமூக அமைப்பில் ''ஈதல்'' என்பது செந்நீரின் பண்பில் ஒன்றாம். அதனால் தான்*

*''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு''*[4]

*(குறள் எண் – 231)*

*என்றார் வள்ளுவர். உயிருக்கு ஊதியம் என்பது வறியவர்க்கு ஈதலே என்று உணர்த்திய சொற்களின் வலிமை அறிந்ததால் தான் தமிழ் மண்ணில் அரசன் முதல் அன்றாடம் பிழைத்து உண்ணும் குடிமகன் வரை ஈகைக் குணம் கொண்டவராக வாழ்ந்தனர்.*

*''ஈயென இரத்தல் இழிந்தன்று*
*ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று''*[5]

*(புறம்.204)*

*என்று புறநானூறு சுட்டுவதும் இங்கு நோக்குதற்குரியதாம். அந்நிலைப்பாட்டில் வறியவர்களுக்கும், இரவலர்களுக்கும், பாணன் முதலியோருக்கும் பொறையன் ஈயும் திறம் படைத்தவனாக வாழ்ந்திருக்கிறான் என்பதை நற்றிணைப் பாடல் 185 எடுத்துக் காட்டுகிறது. பொறையன் உறைந்திருக்கும் கொல்லி மலை உயர்ந்ததாகும். இம்மலை குதிரையின் குளம்புகளால் வழியமைக்கப்பட்டுள்ளது. அம்மலையில் ஏறும் வறியவர்கள் வருத்தமின்றி ஏறிச் செல்கின்றனர் என்பதை*

*''பரிசில் பெற்ற விரிஉளை நல்மான்*
*கவிகுளம்பு பொருத கல்மிசைச் சிறுநெறி*
*இரவலர் மெலியாது ஏறும் பொறையன்*
*உரைசால் உயர்வரைக் கொல்லிக் குடவயின்''*

*(நற்.பா.எ.185-(3-6))*

*என்ற அடிகள் சுட்டுகின்றன.*

*வறுமையை வளமையாக்கும் தன்மை உடையவன் மன்னன் பொறையன் என்பதால் உயர்ந்த கொல்லி மலையில் ஏறுவதில் கூட துன்பம் இன்றிப் பெறப்போகும் இன்பத்தை நினைத்தே பயணிக்கின்றார் என்று விளக்கப்படுகிறது.*

*பொறையனும் – நிலவொளியும் :*

*மன்னர்களைப் பாடும் புலவர்கள் இயற்கைப் பொருளுடன் ஒப்பிட்டுப் பாடும் மரபினைப் பின்பற்றுவர். அந்நிலைப்பாட்டையே எயினந்தை மகன் இளங்கீரனாரும் தனது பாலைத்திணையில் கையாள்கிறார்.*

*பொருள் காரணமாகப் பிரிந்த தலைவன் சுரத்தில் தன் நெஞ்சு தலைவியை நினைப்பதாகவும் ஆயின் அவள் தோளினைத் துய்ப்பது அரிதாயிற்றே என வருந்துவதாகவும் புலப்படுத்துகிறார். இச்சூழலில் தலைவி சூடும் மலர்களின் மணம் மனத்தில் நிறைகிறது. இம்மலர்கள் கொல்லி மலையில் மலர்ந்தது என்றும், இம்மலை பொறையனுக்கு உடமையானது என்றும் புலவர் விளக்குகின்றார்.*

*அவ்வாறு விளக்கும் போது நிறைவான நிலவொளியை ஒத்தவன் பொறையன் என்று சுட்டுகின்றார். நிறைவான நிலவொளி என்பது முழுமையான திங்களைப் போன்றத் தன்மையுடையவன் என்பதையே குறிக்கும். இதனை இளங்கீரனார்*

*"நிறையுறு மதியின் இலங்கும் பொறையன்
பெருந் தண் கொல்லிச் சிறு பசங் குளவிக்
கடி பதம் கமழுங் கூந்தல்
மடமா அரிவை தடமென் தோளே !"*

*(நற்.பா.எ.346, (8-11))*

*என்று விளக்குகிறார். இவ்வரிகளில் நிலவினைப் போன்ற குளிர்ந்த தன்மையுடையவன் பொறையன் என்றும், நிலவொளியைப் போன்று குடிமக்களின் இருள் போக்குபவன் என்றும் பொருள் கொள்ளத் துணிகிறது.*

*நிறைவுரை :*

1. *பொறையன் என்பவன் சேர மரபினைச் சார்ந்தவன் என்பது புலப்படுத்தப்படுகிறது.*
2. *பாறை போலத் தாங்கும் உள்ளம் கொண்டவனே பொறையன் என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளதை அறிய இடமாகிறது.*
3. *கணைக்கால் இரும்பொறையாகப் பேசப்படுபவனே இந்தப் பொறையன் என்ற பெயருடையவராக இருக்கும் என்ற கருத்து வலுவிற்கு நற்றிணைப்பாடல் எண் 18ன் வழி பொய்கையார் சான்று பகர்கிறார்.*
4. *நிலவுடன் பொறையன் ஒப்பிடப்படுவதால் மக்களைக் காப்பாற்றும் தகுதி நிறைந்தவன் என்றும், வன்சொல் அற்றவன் என்றும் சிந்திக்க இடம் அளிக்கின்றது.*
5. *ஈகையில் சிறந்தவனாகவும் பொறையன் இருந்ததை புலவர்கள் நெறிப்படுத்தப்படுகின்றனர்.*
6. *உயர்ந்த கொல்லி மலையை உடையவனாகவும், பரந்த கடற்கரை கொண்ட தொண்டி நகருக்கு உரியவனாகவும் இருப்பதால் உயர்வும், வளமையும் மிக்கவனாகவும், பிறருக்காக வாழும் தன்மை நிறைந்தவனாகவும் பொறையன் வாழ்ந்த தடங்களை நற்றிணைப் பாடல்களின் வழி நிலைநிறுத்துகின்றனர் புலவர் என்பதையே இக்கட்டுரை பகர்கின்றது.*

*அடிக்குறிப்புகள் :*


*1. எஸ்.ராமகிருஷ்ணன் –பக் 1039 – க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. மே 2008*

*2. சான்லாக்ஸ் பன்னாட்டு ஆய்விதழ் பகுதி –II 60 டிசம்பர் – 2019 எல்.இராசாமி நாயுடு ஞாபகர்த்தர் கல்லூரி.*

*3. திருஞான சம்பந்தம் தொல்காப்பியம் பொருளதிகாரம் – திருவையாறு.*

*4. மு.வரதராஜனார் – திருக்குறள் தெளிவுரை – திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தார்ந்த நூற்பதிப்பு கழகம் – சென்னை 18.*

*5. கு.வெ.பாலசுப்ரமணியன் – புறநானூறு – நியு சென்சுரி – சென்னை 98.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********